வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் – சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் சார்பில்

ரூ.11.81 கோடி மதிப்பில் நவீன வசதிகளுடன் அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையம்!

ரூ. 30 கோடி மதிப்பில் 51 புதிய பேருந்துகள்!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இயக்கி – துவக்கி வைத்தார்!

சென்னை,நவ.25-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 11.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள, மேம்படுத்தப்பட்ட அம்பத்தூர் தொழிற் பேட்டை பேருந்து நிலையத்தை திறந்து வைத்து, 30 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 51 புதிய பேருந்துகளின் இயக்கத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.11.2025) வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 11.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள மேம்படுத்தப்பட்ட அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையத்தை திறந்து வைத்து, 30 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 51 புதிய பேருந்துகளின் இயக்கத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கவும், சென்னையை உலகின் முக்கியமான நகரமாக உருவாக்கவும் அனைத்து துறைகளின் சார்பாக பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றார். போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதோடு, பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புதிய பேருந்து முனையங்கள் அமைத்தல், பேருந்து நிலையங்களை பயணிகள், ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் தேவையான அனைத்து உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளோடு மேம்படுத்துதல் உள்ளிட்ட பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றார்.

அம்பத்தூர் தொழிற்பேட்டை நவீன பேருந்து நிலையம்:

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் போக்குவரத்து மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்தபொழுது 10.4.1967 அன்று அம்பத்தூர் பேருந்து நிலையத்தை திறந்து வைத்தார்கள்.

அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையத்தை புனரமைக்கும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 14.03.2024 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 11.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்.

சுமார் 1.63 ஏக்கர் பரப்பளவு கொண்ட அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையத்தில், 26,346 சதுரடியில் தரைதளம் மற்றும் 2 தளங்களுடன் கூடிய பல் பொருள் அங்காடி, 11 எண்ணிக்கையிலான கடைகள், அலுவலக அறை, மூத்த குடிமக்களுக்கான காத்திருப்பு அறை, தாய்மார்கள் பாலூட்டும் அறை, பயண சீட்டுகள் வழங்கும் அறை, உணவகங்கள், ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களுக்கான தங்குமிடங்கள், மின்தூக்கி வசதிகள், ஏடிஎம் வசதிகள்,

20 பேருந்துகள் நிற்கும் வசதி கெண்ட 3 நடைமேடைகள், பேருந்து வழித்தடங்களின் விபரங்கள் கொண்ட பதாகைகள், பயணிகள் இருக்கை வசதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், நவீன கழிப்பிட வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

பெருநகர போக்குவரத்துக் கழகத்தின் அம்பத்தூர் பேருந்து பணிமனை சார்பில் தினந்தோறும் 53 வழித்தடங்களில் 75 விடியல் பயணத் திட்ட பேருந்துகள், 49 டீலக்ஸ் பேருந்துகள், 15 சிறிய பேருந்துகள் என மொத்தம் 139 பேருந்துகள் மூலமாக 2,026 நடைகள் இயக்கபட்டு பொது மக்கள் பயன்பெற்று வருகின்றனர்.

அம்பத்தூர் பேருந்து பணிமனை உள்பட அம்பத்தூர் பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படும் மற்றும் அம்பத்தூர் பேருந்து நிலையம் வழியாக செல்லும் மொத்தம் 81 வழித்தடங்களில் 287 பேருந்துகள் மொத்தம் 3,126 நடைகள் பயணம் மேற்கொண்டு பொதுமக்களுக்கு பேருந்து சேவை அளிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெருநகர போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் 16 புதிய தாழ்தள பேருந்துகள் மற்றும் 35 மகளிர் விடியல் திட்ட புதிய பேருந்துகள் என மொத்தம் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 51 புதிய பேருந்துகளின் இயக்கத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் பி.கே. மூர்த்தி, நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்த குமாரி, போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் த. பிரபுசங்கர், மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர். கௌஷிக், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வடகிழக்கு பருவமழையொட்டி தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களாக பரவலாக மழை பெய்து வரும் நிலையில் தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் திருவைகுண்டம் அணைக்கட்டில் இருந்து 19 ஆயிரம் கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது இந்த நிலையில் திருவைகுண்டம் அணைக்கட்டு, ஏரல் தாமிரபரணி ஆற்று தரைப்பாலம், ஆத்தூர் – முக்காணி சந்திப்பில் தாமிரபரணி ஆற்று பாலம், தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றை நேரில் சென்று கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆய்வு மேற்கொண்டார். உடன் அமைச்சர் பெ.கீதா ஜீவன், சட்டமன்ற உறுப்பினர் எம்.சி. சண்முகையா, மேயர் ஜெகன் பெரியசாமி, கூடுதல் ஆட்சியர் ஜஸ்வர்யா, ஒன்றியச் செயலாளர் ஏ.பி.சதிஷ் குமார் மற்றும் பலர் உடனிருந்தனர்.

தலைமை என். சந்திரன் எம்.சி.! ப. குணாளன் – டி.பாபு – ஏ. வந்தே மாதரம் – ஜி. கே. விவேகானந்தன் முன்னிலை!

ஆலந்தூர் தெற்கு பகுதி சார்பில் இளைஞர் எழுச்சி நாள் பொதுக்கூட்டம் - நல உதவிகள்!

அமைச்சர் தா.மோ. அன்பரசன் – டி.ஆர். பாலு எம்.பி. – ஆர். எஸ்.பாரதி – திண்டுக்கல் ஐ. லியோனி சிறப்புரை!

சென்னை, நவ.25

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் தெற்கு பகுதி சார்பில் நவம்பர் 27 இளைஞர் எழுச்சி நாள் மாபெரும் பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா பகுதிச் செயலாளர் - மண்டல குழு தலைவர் என். சந்திரன் தலைமையில் (27.11.2025 வியாழக்கிழமை) அன்று மாலை 5.00 மணிக்கு ஸ்டேட் பாங்க் காலனி, அண்ணா சிலை அருகில், நங்கநல்லூரில் நடைபெறுகிறது.

ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப. குணாளன், கண்ட்ரோல்மென்ட் நகரச் செயலாளர் டி. பாபு, குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ. வந்தே மாதரம், புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய செயலாளர் ஜி கே வி விவேகானந்தன் (எ) ரவி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆலந்தூர் தெற்குப் பகுதி நிர்வாகிகள் ஜி.சுந்தர்ராஜன், ஆர்.பாபு, ஏ.சாலமோன் எம்.சி., கே. ராஜேஸ்வரிசத், யா இ.ரமேஷ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம் மாபெரும் பொதுக் கூட்டத்தில் நலத்திட்ட உதவிகளை வழங்கி மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன், டி.ஆர். பாலு எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, திண்டுக்கல் ஐ. லியோனி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் மீ.அ.வைதியலிங்கம், பத்ம பிரியா, PTC ஜிசெல்வராஜ், எம்.எஸ்.கே.இப்ராகிம்,ஆர். டி.பூபாலன், இரா.பாஸ்கரன், கீதா ஆனந்தன், கே. எத்திராஜ், கோல்டு டி.பிரகாஷ், பி.சாய் ஜெய்காந்த், ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டன், கே.ஆர்.ஆனந்தன், வே.டில்லிபாபு, கோ. கோட்டீஸ்வரன், ஐ.அழகேசன், எஸ்.ஜெயா, எம். சையத் அபுதாகீர், இ.உலகநாதன், டி.ஜேசுதாஸ், கே. ஆர்.ஜெகதீஸ் வரன், ஏ. வேலவன், ஏ.ஆர்.சரவணா, ஜெ.செல்வேந்திரன், டி.ரவி, ம.கோ.கருணாநிதி, ப. கிருஷ்ணமூர்த்தி, கே.பி.முரளிகிருஷ்ணன், எம்.ஆர்.சீனிவாசன் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள், கன்டோன்மென்ட் நகர் நிர்வாகிகள், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள், புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

இறுதியில் 167வது வட்டக் கழகச் செயலாளர் ஜெ. நடராஜன் நன்றி கூறுகிறார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

“அன்னம் தரும் அமுதகரம்” 278 வது நாள்!

வில்லிவாக்கம் மேற்குப் பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,நவ.25-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 278 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (24.11.2025), வில்லிவாக்கம் மேற்கு பகுதி:

1) வட்டம் 94, சிட்கோ நகர்,

2) வட்டம் 94 அ, ரெட் ஹில்ஸ் ரோடு, வில்லிவாக்கம், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காகவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ.ஜெயின், வே.வாசு, லதா வாசு.எம்.சி.டி.வி. செம்மொழி.எம்.சி. சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன்.எம்.சி வான வில் விஜய், எம்.சுரேஷ் வில்லிவாக்கம் மேற்கு / கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: சிட்கோ சி.சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா. அகிலன், ஜானி(எ) உமாசங்கர், சொ.முருகேசன், ப. லோகுபாபு, கே.எஸ்.பாபு எ.வேதா, சீ.வீக்னேஷ், ச. மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல். சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் ஆலோசனைபடி, மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர்.செ. ஏழுமலை ஏற்பாட்டில் இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு 200 குழந்தைகளுக்கு இனிப்பு. பரிசுப் பொருட்கள் மற்றும் அறுசுவை உணவினை வழங்கினார் உடன் பேரூர்செயலாளர் மோகன்தாஸ், பேரூர் கழக நிர்வாகிகள் அருணா..ரா ரஞ்சித் குமார்.மன்ற உறுப்பினர் அ.மணிவண்ணன் கல்வியாளர் ஜெகதீசன் வார்டு செயலாளர் பஷீர் உள்ளிட்ட கழக முன்னாள் இன்னாள். நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஒன்றியச் செயலாளர் பொன்.சிவக்குமார் தலைமை!

மதுராந்தகம் தெற்கு ஒன்றியத்தில் இளைஞர் எழுச்சி நாள் - தெருமுனைக் கூட்டங்கள்!

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ.– சேலம் சுஜாதா சிறப்புரை

காஞ்சிபுரம்,நவ,24,

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு 25.11.2025 அன்று 48 இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது என்று மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., அறவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து மதுராந்தகம் தெற்கு ஒன்றியக் கழகம் சார்பில் இன்று (25.11.2025-செவ்வாய்க்கிழமை) இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு தெருமுனைக் கூட்டங்கள் மூன்று ஊராட்சிகளில் நடைபெறுகின்றது.

கிணார் ஊராட்சியில் இன்று மாலை 5 மணிக்கும், தேவாலூர் ஊராட்சியில் மாலை 6 மணிக்கும், சாலையூர் ஊராட்சியில் இரவு 7 மணிக்கும் நடைபெறுகின்றது.

தெருமுனைக் கூட்டங்களுக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பொன்.சிவக்குமார் தலைமை வகிக்கிறார்.

ஜெ.அரசு, து.குமார், பி.இளங்கோவன் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

கே.சசிகுமார், ஆர்.வெங்கடேசன், பொன்.சக்கரபாணி, ஏ.ஜி.ஆர்.கமித்ரா தேவி, வி.தனபால், பத்மாசெல்வராஜ், ரோக்ய காயராஜ் மு.சடில்லிபாபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இத் தெருமுனைக் கூட்டங்களில் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்பால்.ஏ, தலைமைக் கழகப் பேச்சாளர் சேலம் சுஜாதா ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இதில் க.செல்வம் எம்.பி, எம்.டி.ஆர்.சாரதிமணிமாறன், செம்பருத்தி துர்கேஷ், ஓ.எஸ்.தினகரன், லயன் ஜி.டி.எம்.தெய்வசிகாமணி, பி.ராஜாராம கிருஷ்ணா, வி.ஸ்ரீதரன், வி. தர்மலிங்கம், ஜெ. ஜெய்சங்கர், வி.தணிகை அரசு, வி. ஜெயந்திவாசுதேவன், இ.சங்கர், டாக்டர் கே.ஆறுமுகம், டாக்டர் எஸ்.சிவா, எம்.எஸ்.ஜெ.இளம்பாரதி, ஜி.பி. ஸ்டீபன்சபரி, பி. ராஜன்பாபு, சுஜாதா ஜெய்சங்கர், லதாமனோகரன், செல்லம்மாள் ஜெயராமன், தரணி பாஸ்கர், ஜெ.அரிகிருஷ்ணன், கோமதி வேலு, பி.சக்திவேல், பி.கேசவேல், சுகுணா சண்முகம், செல்வி ராஜேஷ், டி.சிவக்குமார், ரேவதி தரணிபதி, சுகன்யா ஏக்தாத், இளவரசி ஜெயசிலன், வேளாங்கண்ணி ஜெய பிரகாஷ், தேவி அரசு, பானுமதி பாலு, கே.பாஸ்கரன், இரா.கருணாநிதி, அன்புராமு, சுகந்தாமணி உள்பட மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் எம்.சி. டி.தினேஷ் நன்றி கூறுகிறார்.

சென்னை பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும்

மாணவ, மாணவியருக்கு “எளிய கற்றல் கையேடு”!

மேயர் திருமதி ஆர். பிரியா வழங்கினார்! துணை மேயர் மு.மகேஷ்குமார் பங்கேற்பு!

சென்னை,நவ.25-

ரிப்பன் கட்டட அலுவலகத்தில் நேற்று (24.11.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு எழுதும் மாணவ, மாணவியர் அதிக மதிப்பெண் பெறவும், கற்றல் திறன் குறைவாக உள்ள மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறவும் ஏதுவாக “எளிய கற்றல் கையேட்டினை” மேயர் திருமதி ஆர். பிரியா, மாணவ, மாணவியர் மற்றும் தலைமையாசிரியர்களிடம் வழங்கினார்.

இவ்வினா/விடை தொகுப்பானது 202425ஆம் கல்வியாண்டில் அரசு பொதுத்தேர்வில் அதிக தேர்ச்சி சதவிகிதத்தை அளித்த ஆசியர்களைக் கொண்டு சிறப்பாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. சென்னை உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 10ஆம் வகுப்பில் தமிழ் மற்றும் ஆங்கிலவழிக் கல்வியில் பயிலும் 7,183 மாணவ, மாணவியருக்கு தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் ஆகிய 5 பாடப்பிரிவுகளுக்கும், 12ஆம் வகுப்பில் தமிழ் மற்றும் ஆங்கிலவழிக் கல்வியில் பயிலும் 5,310 மாணவ, மாணவியருக்கு தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், உயிரியல், வணிகவியல், கணக்கியல், பொருளாதாரம், வரலாறு மற்றும் அரசியல் அறிவியல் ஆகிய 10 பாடப்பிரிவுகளுக்கும் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், சென்னை பள்ளிகளில் பொதுத் தேர்வு எழுதும் அனைத்து மாணவ, மாணவியரும் நல்ல மதிப்பெண்கள் பெறுவதுடன், கற்றல் திறன் குறைவாக உள்ள மாணவ, மாணவியர் கூடுதல் மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறவும் வாய்ப்பாக அமையும்.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ்குமார், இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், மாமன்ற உறுப்பினர் எ.ஆர்.ஆர்.மலைச்சாமி, கல்வி அலுவலர்கள், உதவி கல்வி அலுவலர்கள், தலைமையாசிரியர்கள், மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.